## ஒன்றிய பா.ஜ.க. அரசின் சென்சஸ் – தொகுதி மறுவரையறை வஞ்சகம் நிறைந்தது!

### அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும்;

# தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணி வகுக்கும்! தமிழ்நாடு வெல்லும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் சூளுரை!

**சென்னை, ஜூன் 8–**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் சென்சஸ் – தொகுதி மறுவரையறை வஞ்சகம் நிறைந்தது என்றும், அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும் தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணி வகுக்கும்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் சூளுரைத்துள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

- மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் நிகழும் தாமதமும், அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் தொகுதி மறுவரையறையும் தற்செயலானவை அல்ல. நான் தொடக்கம் முதலே எச்சரித்து வரும் ஆபத்து நம் வாசற்படி வரை வந்தேவிட்டது.
- ஒன்றிய பா.ஜ.க. அரசு சென்சஸ் மற்றும் தொகுதி மறுவரையறையைச் செயல்படுத்தவுள்ள போக்கு வஞ்சகம் நிறைந்தது. மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வளர்ச்சியடைந்த தென்மாநிலங்கள் தண்டிக்கப்பட இருக்கின்றன.
- அதேவேளையில், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைப் பல பத்தாண்டுகளாகக் காற்றில்



பறக்கவிட்ட மாநிலங்களோ நாடாளுமன்றத்தில் கூடுதல் இடங்களைப் பெற இருக்கின்றன. அநீதியான இந்த நடவடிக்கை கூட்டாட்சியின் சமநிலையைக் குலைத்து, பொறுப்பற்ற தன்மைக்கு வெகுமதி அளிக்கிறது.

**ப.சிதம்பரம் விளக்கமாக கூறியுள்ளார்!**

- இந்தச் சதித் திட்டம் குறித்து நான் முன்பே எச்சரித்திருந்தேன். தற்போது, ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களும், பா.ஜ.க. எப்படி இந்தக் கைவரிசையைக் காட்டப் போகிறது என்பதை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். நாம் விழிப்போடு இருப்பது மட்டுமல்ல, தென்னகத்தின் குரலைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வியூகங்களையும் தீட்டவேண்டிய தருணம் இது.
- 1971ஆம் ஆண்டு சென்சஸ் தரவுகள் போய், 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தரவுகள் தான், அதற்கடுத்து உடனே நிகழும் தொகுதி மறுவரையறைக்கு, அடிப்படையாக அமையும். தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, தனக்குச் சாதகமான முறையில் நாடாளுமன்ற இடங்களை பா.ஜ.க. நிர்ணயித்துக் கொள்ளத்தான் இது வழி ஏற்படுத்தும்.
- தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் மாநிலங்களின் கவலைகள் கருத்தில் கொள்ளப்படும் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் சொல்கிறது. ஆனால் இவை தெளிவற்ற மழுப்பல் பதில்கள். இவர்கள் சொல்வதைத் தண்ணீரில்தான் எழுதிவைக்க வேண்டும். நாம் கேட்பதெல்லாம் நாடாளுமன்றத்தில் உறுதி அளியுங்கள், உரிய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுங்கள் என்பதே!

**ஜம்மு – காஷ்மீரில் பா.ஜ.க. வாக்குறுதி என்ன ஆச்சு!**

- பிரிவு 370ஐ நீக்கிய பிறகு என்ன நடந்தது என்று பார்த்தாலே இவர்களது பேச்சின் இலட்சணம் புரிந்துவிடும். ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என ஒன்றிய அரசு சொன்னது. தேர்தலும் நடைபெற்றது. உச்ச நீதிமன்றத்திலேயே உறுதியளிக்கப்பட்டது. ஆனாலும், ஜம்மு காஷ்மீர் இன்னும் யூனியன் பிரதேசமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சத்தியவான்களோடு தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.
- 2027 சென்சஸ் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை ஒன்றிய அரசு மேற்கொண்டால், தென்னகத்தின் ஜனநாயக வலிமை மதிப்பில்லாத அளவுக்குக் குறைந்துவிடும்.
- அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுய நலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும், தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணிவகுக்கும்! நம் மாநிலம் வளர்ச்சியடைந்துள்ள ஒரே காரணத்துக்காகத் தண்டிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### நெல்லை மாவட்டம் – பாளையங்கோட்டையில் – காயிதேமில்லத் பெயரில்

## ரூ.100 கோடி மதிப்பில் நவீன நூலகம் அமைப்பதற்கான இடம்!

### தமிழ்நாடு பொது நூலக இயக்குநர் பொ.சங்கர் ஐ.ஏ.எஸ். நேரில் பார்வையிட்டு ஆய்வு!

நெல்லை, ஜூன் 8-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை மாவட்ட தொழில் மையம் அருகில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் காயிதே மில்லத் நவீன நூலகம் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தினை தமிழ் நாடு பாடநூல் கழக மேலாண்மை இயக்குனர், பொது நூலக இயக்குனர் பொ.சங்கர், மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பல்வேறு மாவட்டங்களில் புதிய நூலகங்கள் கட்டப்பட்டு வருகிறது.அதன் அடிப்படையில் மதுரையில் கலைஞர் நூலகம் கட்டப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் நூலகம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. அதனை தொடர்ந்து தமிழ் நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் நவீன நூலகம் கட்டப்படும் என்றும், அதற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்தும் அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் நூலகம் கட்டுவதற்கான இடத்தினை தேர்வு செய்தனர். 09.05.2025 திருச்சியில் நடைபெற்ற விழாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமையய உள்ள நூலகத்திற்கு காயிதே மில்லத் நூலகம் என்று பெயர் சூட்டப்படும் என அறிவித்தார்கள்.

இந்த நூலகம் தென் மாவட்டங்களில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும், மாணவர்களும் பயன்பெறும் வகையில் அமைய உள்ளது.

கலைக்கல்லூரி, மருத்துவக் கல்லூரி,பொறியியல் கல்லூரி என அனைத்து மாணவர்களும், போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கும் பயனுள்ள வகையில் இந்த நூலகம் அமையும்.

இந்த நூலகத்தில் தரைத்தளத்துடன் கூடிய நான்கு தளத்தில் மினி திரையரங்கம், ஆடிட்டோரியம், மாற்றுத் திறனாளிகளுக்கென தனி அறை, மாநாட்டுக்கூடம் போன்ற எண்ணற்ற வசதிகளுடன்,1 லட்சம் புத்தகங்களுடன் இந்த நூலகம் அமைய உள்ளது.

இந்த நூலகம் அமைய உள்ள இடத்தினை தமிழ் நாடு பாடநூல் கழக மேலாண்மை இயக்குனரும் பொது நூலக இயக்குனருமான பொ.சங்கர், மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

நிகழ்வில் கண்காணிப்பு பொறியாளர் (கட்டிடங்கள்) ஸ்ரீதரன்,உதவி பொறியாளர் தினேஷ், மாவட்ட பொது நூலகர் மீனாட்சி சுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---




**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

பெரம்பலூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.06.2025 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பலூர் | ஜி.கே.ரெசிடன்சி, வெங்கடேசபுரம், பெரம்பலூர். |
| | காலை 11.00 மணி | நீலகிரி | பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், குன்னூர் சாலை, உதகை. |

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!**

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சோழிங்கநல்லூர் | கைலாஷ் கார்டன், பழைய மகாபலிபுரம் சாலை, சோழிங்கநல்லூர், சென்னை. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

### புதுச்சேரி–காரைக்கால் மாநிலக் கழக அவைத் தலைவர்

## க.மணிவண்ணன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜீன் 8–

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புதுச்சேரி - காரைக்கால் மாநிலம். திருப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த கழக முன்னாள் பொதுக் குழு உறுப்பினரும் - மாநிலக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும் - மாநிலக் கழக அவை தலைவருமான க.மணி வண்ணன் அவர்கள் மறை வெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் - புதுச்சேரி - காரைக்கால் மாநிலக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## அப்பம்பட்டில் செம்மொழி நாள் விழா!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, ஜூன் 8 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா அப்பம்பட்டு கூட் ரோட்டில் நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவருமான விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு ஊர்வலமாகச் சென்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து ஏழை எளிய பொதுமக்களுக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பிரெட், பிஸ்கட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு நகர் கழக செயலாளர் பெரி.பாலா தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ, பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மதார்சேட், நகர் கழக நிர்வாகிகள் அன்பு, இளங்கோ ,சாகீர்உசேன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் கோம்பை பேரூராட்சி பகுதியில்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்எல்ஏ. கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் கோம்பை பேரூர் செயலாளர் முருகன். பேரூராட்சி தலைவர் மோகன். மாவட்ட ஆதி திராவிட நலவாரிய அமைப்பாளர் கோம்பை தங்கம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.